பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

S. M. Fernando
OPTICIANS
SIGHT TESTED
PRESCRIPTIONS
ACCURATEY
DISPENSED
580, HOSPITAL ROAD,
[Near Bank of Ceylon]
JAFFNA.

# உதயன்

விலை ரூபா 3-50

கண்வைத்திய நிபுணர்கள்
சிபார்சு செய்யும்
கண்ணாடிகளை
சரியாகக் கொடுப்பவர்கள்
எஸ். எம். பெர்னாண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி,
(இலங்கை வங்கி
அருகாமையில்)
யாழ்ப்பாணம்.

சுடர்: 5 சுக்கில ஞூ பங்குனி மீ 02 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1410 ஷஃபான் பிறை 17 (15-03-1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 34

# ஆறாவது திருத்தத்தை நீக்க அரசு முழு முயற்சி

## ஐக்கிய சோஷலிச முன்னணியின் உதவியை நாடக்கூடிய சாத்தியம்

கொழும்பு, மார்ச். 15

பிரிவினை கோருவதைத் தடுக்கும் அரசியலமைப்பின் ஆறாவது திருத்தத்தை நீக்குவதற்கு அரசாங்கம் முழு முயற்சியையும் மேற்கொள்ளும் என்று அதனுடன் நெருங்கிய வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

இவ் விடயத்தில் அரசாங்கம் வெறும் ஆலோசனை மட்டத்தில் அல்லாமல் உறுதியாக இருப்பதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

அரசமைப்பின் ஆறாவது திருத்தத்தை நீக்குவது நாட்டின் இறைமையைப் பாதிக்காது, 1978இல் உருவாக்கப் பட்டு, ஏற்றுக்கொள்ளப் பட்ட அரசியலமைப்பு, நாட்டின் இறைமையைப் பாது காக்கிறது. ஆகவே ஆறாவது திருத்தச்சட்டம் தேவையற்றது.

அதனை நீக்குவது குறித்து எவரும் வேண்டாத பிரசாரங்களைச்செய்ய நியாயமில்லை.

ஆகையால் இதுவிஷயத்தில் அரசு முழுமுயற்சி எடுக்க உறுதிபூண்டுள்ளது — என்று அரசாங்கப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

ஆறாவது திருத்தத்தை நீக்குவதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குப் பலம் வேண்டும்.

ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எவ்

[ 6 ஆம் பக்கம் பார்க்க ]

## முதல்வர் பெருமாள் மொரிஷியஸ் தீவிலா?

கொழும்பு, மார்ச் 15

திருகோணமலையின் சீனக்குடா விமான நிலையத்திலிருந்து கடந்த ஞாயிறன்று புறப்பட்டுச் சென்ற வடக்கு கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு. அ. வரதராஜப் பெருமாள் எங்கே?

இந்தக் கேள்விக்கான சரியான, தெளிவான உறுதியான பதில் இன்னும் கிடைக்கவில்லை.

ஒவ்வொரு நாட்டு செய்தித் தொடர்பு நிறுவனங்களும் புதுப்புதுத் தகவல்களை வெளியிட்டு வருகின்றன.

திரு. வரதராஜப்பெருமாள் மொரிஷியஸ் தீவில் தங்கி இருப்பதாக இப்பொழுது தகவல் வெளியாகி உள்ளது.

இந்துஸ்தான் டைம்ஸ் இச்செய்தியை வெளியிட்டுள்ளது. (ஒ-எ)

## திருமலையில் பொலிஸார் பாதுகாப்பு

கொழும்பு, மார்ச் 15

திருமலை நகரிலிருந்து இந்திய அமைதிப்படை வெளியேறியதை அடுத்து இலங்கைப் பொலீஸார் நகரில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

சிங்கள மகாவித்தியாலயத்திலும் இறங்கு துறையிலும் மட்டும் இலங்கை இராணுவத்தினர் நிலை கொண்டுள்

[ 6 ஆம் பக்கம் பார்க்க ]

## பயிலுநர் ஆசிரியர்: முல்லைத்தீவில் 312 பேருக்கு இன்று நியமனக் கடிதம்

முல்லைத்தீவு, மார்ச் 15

முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து பயிலுநர் ஆசிரியர்களாகத் தெரிவு செய்யப்பட்ட 312 பேருக்கு இன்று வியாழக்கிழமை நியமனக் கடிதங்கள் வழங்கப்படும்.

இந்த 312 பேரில் 34 பேர் முஸ்லிம்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

புதிய ஆசிரியர்களுக்கான நியமனக் கடிதங்களை முல்லைத்தீவு மாவட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். எஸ். மனோகரன் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி திறந்த வெளியரங்கில் வைத்து வழங்குவார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து தெரிவான மொத்தம் 429 பேரில் 300 பேருக்கு இன்று புனித சிசிலியா மகளிர் வித்தியாலய மண்டபத்தில் வைத்து நியமனக் கடிதங்கள் வழங்கப்படும்.

மிகுதியான 129 பேருக்கும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்திலும் அரசு - புலிகள் பேச்சு?

கொழும்பு, மார்ச் 15

விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையேயான பேச்சுவார்த்தைகள் யாழ்ப்பாணத்திலும் நடைபெறலாம் என்று அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்திய அமைதிப் படை முற்றாக வாபஸ் பெற்ற பின்னரே இப்பேச்சுவார்த்தை நடைபெறும் என எதிர்பார்க்கப்பட்டது.

அண்மையில் அமைச்சர் ஜனாப் ஏ. சி. எஸ். ஹமீத் மட்டக்களப்புக்குச் சென்று விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியது தெரிந்ததே. [ஓ-21]

## முஸ்லிம்களின் கருத்தறிய ஹமீது கிழக்கே செல்வார்

விடுதலைப் புலிகள் — ஸ்ரீலங்கா அரசு பேச்சுவார்த்தை தொடர்பாக கிழக்கு மாகாண முஸ்லிம்களின் கருத்துக்களை அறிந்து கொள்ளும்பொருட்டு உயர் கல்வி அமைச்சர் ஜனாப் ஏ. சீ. எஸ். ஹமீது இம்மாத இறுதியில் கிழக்கு மாகாணத்திற்கு விஜயம் செய்யவுள்ளார்.

மட்டக்களப்பு, மூதூர், கல்முனை ஆகிய இடங்களில் முஸ்லிம் சமூக, சமய, அரசியல் அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் அமைச்சர் ஹமீது கலந்துரையாடுவார்.

தமிழ் - முஸ்லிம் சமூக ஒற்றுமை, முஸ்லிம்களின் பாதுகாப்பு, தனித்துவம் பேணப்படல் போன்றன குறித்து இதில் ஆராயப்படும் எனத் தெரியவருகிறது. (ஒ-21)

## நிவாரண வேலைகள் குறித்து யாழ் அரச அதிபருடன் யு. எஸ். அதிகாரி ஆராய்வு

யாழ்ப்பாணம், மார்ச். 15

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்ட யு. எஸ். எயிட்ஸ் நிறுவன இயக்குனர் திருமதி பமிலா வோல்டின் பல்வேறு நிவாரணத் திட்டங்களை பார்வையிட்டார்.

கடந்த திங்கட்கிழமை இங்கு வந்து சேர்ந்த அவர் யாழ்-அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட்டுடன் நிவாரண வேலைகள் குறித்து ஆராய்ந்தார்.

யாழ் மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தும் ஒன்றிணைந்த நிவாரணத் திட்டத்தின் செயற்பாடுகள் குறித்து முக்கியமாக ஆராயப்பட்டது.

ஊற்று நிறுவனத்தின் செயற்பாடுகளையும், சேதம

(6ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.பதிவகத்தில் அவசர தேவைகளுக்கு மட்டுமே சான்றிதழ் வழங்கப்படுகிறது

யாழ்ப்பாணம், மார்ச் 15

அவசர தேவைகளுக்கு மட்டுமே இப்பொழுது யாழ். செயலகப் பதிவாளர் பிரிவில் பிறப்பு, இறப்பு, விவாகச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

பதிவாளர் பிரிவில் சான்றிதழ்கள் வழங்கப் பதிவுப் பத்திரங்கள் இல்லாததே வேலைகள் ஸ்தம்பிதம் அடையக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது.

அங்குள்ள போட்டோஸ்ராட் மெசின் பழுதாகி இரண்டுமாத காலமாகிவிட்டது. பத்திரம் இல்லாத போதும் மெசின் திருத்தப்பட்டால் சான்றிதழ்கள் வழங்கமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையால் அவசர தேவைகளான புனர்வாழ்வு, நியமனம் ஆகியவற்றுக்கு மட்டும் உள்ள சொற்ப பிரதிகளில் சான்றிதழ் தற்சமயம் வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

## முச்சந்தி முரளி



இரண்டு நாடுகளும் ஒப்பந்தம் செய்யிற பழக்கத்தை விட்டுவிடக் கூடாது என்பதற்காகவோ பின்னை...!

# இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் புதிய ஒப்பந்தம்

## தொண்டமான் உதயனுக்குப் பேட்டி

-கொழும்பிலிருந்து உதயன் சிறப்புச் செய்தியாளர்-

கொழும்பு. பெப். 15

மலையகத் தமிழ் மக்கள் தொடர்பாக இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையில் புதிய ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்படும். அதற்குரிய பூர்வாங்கப் பேச்சுக்கள் விரைவில் ஆரம்பமாகவுள்ளன.

இவ்வாறு அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் உதயனுக்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்தார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும், புடைவைக் கைத்தொழில் அமைச்சருமான திரு. தொண்டமான், உதயனுக்கு நேற்றுப் பேட்டியளித்தார். அப்போது அவர் சொன்னதாவது:-

சிறிமா — சாஸ்திரி ஒப்பந்தத்தின்கீழ் இந்தியா செல்வதற்கு இந்தியக் கடவுச் சீட்டுப்பெற்ற, இந்திய வம்சாவளி மக்களில் பெரும் எண்ணிக்கையினர் இன்னமும் இங்கேயே தங்கிஉள்ளனர்.

1983ஆம் ஆண்டுக்குப் பின்னர் மலையகத் தொழிலாளர்களும், வடக்கு கிழக்கைச் சேர்ந்தவர்களும் ஆயிரக்கணக்கில் இந்தியாவுக்கு அகதிகளாகச் சென்றிருந்தனர்.

இந்தப் புதிய சூழ்நிலைக்கு ஏற்ப இலங்கையும் இந்தியாவும் ஒருமுடிவுக்கு வரவேண்டி உள்ளது. அதன்பொருட்டு புதிய ஒப்பந்தம் ஒன்றைச் செய்யவேண்டும் என நான் அரசாங்கத்தை வற்புறுத்தி வந்தேன்.

அதன் அடிப்படையில் புதிய ஒப்பந்தம் ஒன்றைச்

( 6 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் வின்சென்ட் வவுனியா வருகிறார்

புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் திரு. வின்சன்ட்பெரேரா எதிர்வரும்21-ஆம்திகதி வவுனியாவுக்கு விஜயம் செய்கிறார். கடந்த கால வன்செயல்கள் மற்றும் இராணுவ நடவடிக்கைகளின் போது ஏற்பட்டபாதிப்புக்களைநிவர்த்தி செய்யும் புனர்வாழ்வு வேலைகள் அமுலாகும் முறைகளை அவர் பார்வையிடுவார்.

அமைச்சர் வின்செண்ட் பெரேரா திணைக்கள தலைவர்களுடன் மாநாடு ஒன்றையும் நடத்த இருக்கிறார். (ஒ-3)

## ★ யாழ். மாவட்டத்தில் 435 கிராம சேவையாளர் பிரிவுகள்; அலுவலர்கள் இன்று பதவியேற்பு

யாழ்ப்பாணம், மார்ச் 15

யாழ். மாவட்டத்தில் கிராம சேவையாளர் பிரிவுகளின் எண்ணிக்கை 227இல் இருந்து 435ஆக அதிகரிக்கப் பட்டுள்ளது.

சகல பிரிவுகளுக்கும் புதிய இலக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன.

புதிய பிரிவுகளுக்கு விவசாய விரிவாக்க உத்தியோகஸ்தர்களும், பயிர்ச்செய்கை உத்தியோகஸ்தர்களும் நியமிக்கப்பட்டனர். முந்திய கிராம சேவையாளர்களும் பழைய பிரிவுகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். 18 பெண்கள் முதல் தடவையாகக் கிராம சேவையாளர்களாக நியமனம் பெற்றுள்ளனர்.

### 18 பெண்களும் அடங்குவர்

புதிதாக நியமனம் பெறும் 381 கிராம சேவையாளர்களும் இன்று பொறுப்புக்களை ஏற்கிறார்கள். மேலும் வெற்றிடமாகவுள்ள 54 பிரிவுகளுக்கும் அருகில் உள்ள கிராம சேவையாளர் பதில் கடமையாற்றுவர்.

யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவில் புதிய கிராம சேவையாளர் பிரிவுகளும் அலுவலர்களது பெயர்களும் வருமாறு:-

நெடுங்குளம் (ஜே.61)-கே. எஸ். இராசையா, கொழும்புத்துறை கிழக்கு (ஜே. 62) - எஸ். எம். டொமினிக், கொழும்புத்துறை மேற்கு (ஜே.63) - செல்வி ஆர். கமலவேணி, பாஷையூர் கிழக்கு (ஜே. 64) - நிரப்பப்படவில்லை.

பாஷையூர் மேற்கு(ஜே.65)

[6 ஆம் பக்கம் பார்க்க]

### சுப நேரம்

15- 3 - 1990

வியாழக்கிழமை பங்குனி 2

சுபநேரம்:

7 -51முதல் 9 -21 வரை

இராகுகாலம்-

01 - 51முதல் 3 -21 வரை

இவை இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்

வெளிவந்துவிட்டது!

வரதர் மாணவர் அகராதி

(ஆங்கிலம் - தமிழ்)

Varathar Students Dictionary

(ENGLISH - TAMIL)

18400 சொற்கள் — 600 பக்கங்கள்

தொகுப்பாசிரியர்:

கொக்குவிலான் கா. வை. இரத்தினசிங்கம்

ஆங்கிலம் பயிலும் மாணவருக்கு அத்தியாவசியமானது

எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும்:

விலை ரூபா. 95/-

தொகையாகப் பெறுவதற்கு;

ஆனந்தா புத்தகசாலை, 226,காங்கேசன்துறை வீதி. யாழ்ப்பாணம்.

பூபாலசிங்கம் புத்தகசாலை பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.

(சி-4004)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பூரண விளைத்திறனுடைய பம்பாய் வெங்காயம், பீட்றூட், கோவா விதைகள் விற்பனைக்குண்டு பிள்ளையார், 259, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (2819)

ஆனைக்கோட்டை கூளாவடியில் பிரதான வீதிக்கு அருகில் 8 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்புக்கு: போதகர் புதுவாழ்வு நலையம், கூளாவடி, ஆனைக்கோட்டை. (2859)

இந்தியாவிலிருந்துகொண்டு வரப்பட்ட புத்தம் புதிய சரஸ்வதி வீணை விற்பனைக்கு உண்டு. இல. 110 கோயில் வீதி, நல்லூர் யாழ்ப்பாணம். (12047)

மானிப்பாய் பிரதான வீதியில் இருந்து 100 யார் தூரம் இணுவில் வீதியில், 3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டியமுகவரி: திருமதி வீ. கனகசபைஇணுவில் வீதி, மானிப்பாய். (2827)

### அச்சடிக்கும் திருமண அழைப்பிதழ்

சகல டிசைன்களிலும் அச்சடிக்கும் திருமண அழைபிதழ் கார்ட்டுக்கள் விற்பனைக்கு உண்டு. ஸ்ரீ காந் புத்தகசாலை, (பஸ் நிலையம் முன்பாக) மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி/3486)

### ஆங்கிலப் புத்தகம்

ஆங்கிலம் பேச, எழுத வாசிக்க சிறந்த முறையில் எழுதப்பட்ட புத்தகமென எல்லோராலும் பாராட்டுப் பெற்ற புத்தகம்தான் Basic Grammar & Spoken Practical கிடைக்கும் இடம்: பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (11992)

### 90 ஆம் ஆண்டுப் பஞ்சாங்கம்

இரகு வாக்கிய பஞ்சாங்கம் திருக்கணிதப் பஞ்சாங்கம் பெரும் திரளாக விற்பனைக்கு உண்டு. தங்களின் சகல ஆவணங்களும் மிகவும் தெளிவாக போட்டோஸ்ரற், எடுத்துக்கொள்ள மக்மிலன் புத்தகசாலை No 3, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (சி-3977)

இரகுநாதையர் வாக்கிய, திருக்கணித பஞ்சாங்கம் வியாபாரிகட்கு தொகையாக விசேட கழிவுடன் விற்பனைக்குண்டு. ஸ்ரீ காந் புத்தகசாலை, மின்சார நிலைய வீதி, பஸ் நிலையம் முன்பாக, யாழ்ப்பாணம். (சி/3487)

### பெண் தொழிலாளர் தேவை

கைத்தொழில் நிறுவனத்திற்கு 18 வயதிற்கும் 25 வயதிற்கும் உட்பட்ட பெண் தொழிலாளர் தேவை. அயல் கிராமங்களில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும். வைட்பீல்ட் இன்டஸ்ரீஸ், வல்லை வீதி, சங்கானை. (2860)

### மணமகன் தேவை

யாழ்ப்பாணஇந்துவேளாள பட்டதாரிப் பெண்ணுக்கு 35-42 வயதுக்கு இடைப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர் அல்லது தனியார் துறையில் வேலைசெய்யும் பண்புள்ள மணமகன் தேவை. தாரமிழந்தோரும் விவாகரத்தானோரும் விண்ணப்பிக்கலாம். மங்கள ஏஜென்சி கொய்யாத்தோட்டம் யாழ்ப்பாணம். (12049)

### பெண் காசாளர் தேவை

எமது ஸ்தாபனத்திற்கு பெண் காசாளர் தேவை முன் அனுபவம் உள்ளவருக்கு முன் உரிமை வழங்கப்படும். விண்ணப்பிக்கவும் துர்க்கா டிரேடர்ஸ் 85 மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (2857)

### SPOKEN ENGLISH

ஆங்கிலம் இலகுவில் பேசப் பழக உதவும் கைநூல்கள் Series 1-7 தயாரிப்பு S.B. Iyar கிடைக்குமிடம் 12, வைமன் வீதி, நல்லூர். (11977)

### தவறிவிட்டது

கந்தையா புவனேஸ்வரி கொக்குவில் மேற்கு கொக்குவில் என்னும் விலாசமிடப்பட்ட கடவுச்சீட்டும் குடும்ப உணவு முத்திரையும் 11-3-90 ஞாயிற்றுக்கிழமை கைலாசபிள்ளையார் கோயிலுக்கும் ஸ்ரான்லிக் கல்லூரிக்கும் இடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் ச. கந்தையா கொக்குவில் மேற்கு எனும் விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (12048)

### Typewriters

Typewriters வாங்கவும், விற்கவும், சிறந்த முறையில் திருத்திக்கொள்ளவும், நாடுங்கள் FUDO, 39/17 மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணம். (Shabra-Samy & Co அருகாமையில்) (சி/3451)

### சேவை

Mini சிறந்த முறையில் வைபின்டிங் வேலைகள் செய்து கொடுக்கப்படும். மோட்டார் சைக்கிள் பற்றிகள் Spark Plvg குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம். நாடுங்கள் மினி ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். (12040)

### காஸ் குக்கர் திருத்த

உங்களுடைய Gas குக்கரில் பிழைகளா? இல்லையெனில் புதிய உதிரிப் பாகங்கள் மாற்ற வேண்டுமா? எதுவாயினும் மிகத் திறமையான முறையில் குறித்த தவணையில் திருத்திக் கொடுக்கப்படும். அதற்கு நீங்கள் நாடவேண்டிய இடம் D. முஸ்தபா 38, 1ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (2862)

---

## JAFFNA ACADEMY & SCHOOL OF TECHNOLOGY

### G. C. E. A/L AUGUST - 1990

1990 ஆம் ஆண்டு பரீட்சைக்கான வகுப்புகள் 19-03-90 திங்கட்கிழமை ஆரம்பமாகின்றன. பாடத்திட்டத்தின் முழு அலகுகளும் வினாக்கள் மூலம் முற்றாக மீட்டல் செய்யப்படும். சேர விரும்புவோர் St. JOHN'S COLLEGE WELFARE OFFICE இல் விண்ணப்பப் படிவங்களை காலை 9 மணி முதல் 3 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

DIRECTOR

376, MAIN STREET,
CHUNDIKULI

(12050)

---

## கலை வர்த்தகக் கல்லூரி, C. C. A.

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

### SPOKEN ENGLISH

- LISTENING
- READING
- WRITING

ஆசிரியர்;
**Mrs. SHAN**

ஆரம்பம்: 17 - 03 - 1990 சனி 2.00 p.m

(சி-4013)

---

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

(17. 03. 1990)



**Dr. (Mrs.) Margaret Thuraiappah**

Born ... ... ...: 19 - 02 - 1923
Called to the Kingdom of God: 17 - 03 - 1988

Dr. திருமதி மாகிறேற் துரையப்பா
அவர்கள்

பரலோக இராச்சியத்தில் பிரவேசித்து இரண்டாம் ஆண்டு நிறைவு தினம் 17 - 03 - 1990 சனிக்கிழமை காலை 6 30 மணிக்கு பண்டத்தரிப்பு பற்றிமா ஆலயத்தில் திருப்பலிப்பூசை ஒப்புக் கொடுக்கப்படும். பூசையிலும், பிரார்த்தனைகளிலும் பங்குபற்ற யாவரையும் அழைக்கின்றோம்.

கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

இராஜஸ்தான்,
பண்டத்தரிப்பு.

(2768)

---

வலிகாமம் மேற்குப் பிரதேச சபை
(சுழிபுரம், சங்கானை, வட்டுக்கோட்டை, அராலி உப அலுவலகங்கள்)

## 1990 ஆம் ஆண்டிற்கான ஆதனவரி பற்றிய அறிவித்தல்

1990 ஆம் ஆண்டிற்கான 1ஆம் கந்தாய வரி பங்குனி மாதம் 31ஆம் திகதிக்கு முன்பும், 2 ஆம் கந்தாய வரி ஆனி மாதம் 30 ஆம் திகதிக்கு முன்பும், 3 ஆம் கந்தாய வரி புரட்டாதி மாதம் 30ஆம் திகதிக்கு முன்பும், 4 ஆம் கந்தாய வரி மார்கழி மாதம் 31ஆம் திகதிக்கு முன்பும் செலுத்தப்படல் வேண்டும்.

ஒவ்வொரு கந்தாயத்திற்கும் முதல் மாதம் முடிவதற்கு முன்பு செலுத்துபவர்களுக்கு 5 வீத கழிவு வழங்கப்படும்,

குறித்த காலத்துக்குள் வரி செலுத்தத் தவறும் வரியிறுப்பாளர்கள் மீது குடியிருப்பு ஆதனமாயின் 15% மும் வியாபார நோக்கத்திற்காகப் பாவிக்கப்படும் ஆதனமாயின் 20% மும் பற்றாணைச் செலவாக அறவிடப்படும்.

விபரங்களை வரியிறுப்பாளர்கள் பிரதேசசபை உப அலுவலகங்களில் அறிந்து கொள்ளலாம்.

து. வைத்திலிங்கம்
விசேட ஆணையாளர்
வலிகாமம் மேற்குப் பிரதேச சபை

வலிகாமம் மேற்குப் பிரதேச சபை அலுவலகம்,
சுழிபுரம், 13 - 03 - 1990 (சி-3446)

---

கம்பி ஆணிகள்

## விநியோகஸ்தர் தேவை

கம்பி ஆணி உற்பத்தி செய்யும் எமது நிறுவனத்திற்கு வடக்கு-கிழக்கு பகுதியில் விநியோகஸ்தர்களை பிரபல விற்பனையாளர்கள் மத்தியில் இருந்து நியமிக்க அக்கறை கொண்டுள்ளோம்.

எமக்குத் தேவைப்படும் விநியோகஸ்தர்களிடம் போதுமான ஸ்டோர் வசதிகள், வாகனம் ஆகியன இருக்கவேண்டும். வங்கி உத்தரவாதம் தரக்கூடியவர்களாகவும் அவர்கள் இருக்க வேண்டும்.

இவ்விளம்பரம் வெளியான தினத்தில் இருந்து அடுத்து வரும் ஏழு நாட்களுக்குள் விண்ணபங்கள்:

To
Director
**MACKWOODS METAL PRODUCTS (PVT) LTD.**
P. O. BOX, 91, COLOMBO.

என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

(சகல விண்ணப்பங்களும் ஆங்கிலத்திலேயே அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



**திரு. சுப்பையர் நாகராஜா**

[யாழ் / ஆஸ்பத்திரி பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி] (சார்ஜண்ட்)

அன்னை மடியில்: 17 - 11 - 1941
இறைவன் அடியில் 13 - 02 - 1990

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் எமக்கு நல்வழிகாட்டி அன்புடனும், பண்புடனும், பாசத்துடனும் வாழ்ந்து எம்மை வாழ வைத்த தெய்வமே!

தன்சுகத்தை நோக்காது மற்றவரின் சுகங்காத்தாய்
தாயுள்ளம் கொண்டாய்
சமூகத்தின் பணி கொண்டாய்
எமதருமை ராஜாவே இவ்வுலகம் விட்டகன்றாய்
விளங்கிய நின் இடம் வகிக்க
வேறெவரும் இல்லை ஐயா

உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றென்றும் இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்
மனைவி, பிள்ளைகள்,
சகோதரிகள், மைத்துனர்கள்.

693 A, மானிப்பாய் வீதி,
ஓட்டுமடம்,
யாழ்ப்பாணம்.

[2765]

---

## முதலாவது பிறந்ததின வாழ்த்து



**★ செல்வி T. தர்மீ ★**

ஜேர்மனியை வசிப்பிடமாகக் கொண்ட தர்மேஸ்வரன் திருமகளினது அருமை மகளும் சுதுமலையில் வசிக்கும் நல்லையா திரவியத்தினதும் இணுவிலில் வசிக்கும் முருகையா சரஸ்வதி ஆசிரியர்களினதும் அருந்தவப் பேத்தியும், சதீஸ்வரனின் அன்புத் தங்கையும், சிவாவின் அன்பு மருமகளும், தேவியின் பெறாமகளுமாகிய தர்மீ சுதுமலையில் தனது முதலாவது பிறந்த நாளை மிக விமரிசையாகக்கொண்டாடுகிறார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, அன்பு அண்ணா சதீஸ்வரன், பேரன்மார், பேத்திமார், பூட்டன்மார், பூட்டிமார், சிவாமாமா, தேவிச் சித்தி, உதயன் அண்ணா, மீரா அக்கா (ஜேர்மன், ரெங்கன் மாமா (சுவிஸ்), ஆச்சி, ஐயாமார், அம்மம்மாமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சின்னம்மாமார், மாமாமார், மாமிமார், அன்ரிமார், அண்ணன்மார், தம்பிமார், தங்கைமார், மச்சான்மார், மச்சாள்மார், சவூதி, ஜேர்மன், கனடா, பிரான்ஸ், கொலண்ட், டென்மார்க் ஆகிய இடங்களில் உள்ள சித்தப்பாமார், மாமாமார், பெரியப்பாமார், உற்றார், உறவினர் பல்கலையும் பெற்று பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரமாண்டு சீரும் சிறப்புடனும் வாழ்க வளர்க என்று மனமார வாழ்த்துகின்றார்கள்.

[11994]

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



பரகதி அடைந்த பாலகன்
**தர்மலிங்கம் ஐங்கரன்**

அன்னை மடியில்: 13 - 01 - 1989
ஆண்டவன் மடியில்: 13 - 02 - 1990

நீ மறைந்து ஓர் மாதம்
நிலவு மிந்த வேளைதனில்
நாம் மறந்து போவோமா,
ஐங்கரனே எம் செல்வமே,
தாய் வருந்தித் தத்தளிக்கும்,
அண்ணர் வருந்தி ஆவலுறும்,
தாங் கொணாச் சோக நிலையை நீயறியாய்!
எப்போதும் எம் நினைவுதனில் நிற்பாயே.

உன் பிரிவை ஆற்றாது துடிக்கும்
தந்தை, தாய், சகோதரர்,
உற்றார், உறவினர்.

1ஆம் வட்டாரம்,
மு/ புதுக்குடியிருப்பு.

[2793]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கரைச்சி---

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி) கமலரஞ்சினி (வட்டக்கச்சி), செல்வி எஸ். சிவமலர் [கண்டாவளை], செல்விபி. தமிழ்ச்செல்வி [கண்டாவளை], செல்வி பி. பாப்பா [முரசுமோட்டை], திரு. கே உதயகுமார் [வட்டக்கச்சி], செல்வி பி. புஷ்ப்பமாலா [இராமநாதபுரம்(, செல்விஜி. செல்வநிதி (வட்டக்கச்சி), செல்வி ஏ. சந்திரகுமாரி (வட்டக்கச்சி), செல்வி கே. கெங்கநாயகி (குஞ்சுப் பரந்தன்), செல்வி என். புஷ்பலதா (குமாரபுரம்), செல்வி ஜி. சிவாஜினி (முரசுமோட்டை), திரு. எம். உமாசங்கர் (உருத்திரபுரம்), செல்வி வி. பவானி (வட்டக்கச்சி) திரு. எஸ். ஏ. சகாயராஜா (ஜெயந்திநகர்),

திருமதி ரீ. அற்புதசோதி (அக்கராயன் குளம்), செல்வி எஸ். சந்திரா (குமாரபுரம்), திரு. ஆர். பரம்சோதி, (சிவநகர்), செல்வி பி. சூரியகலா(இராமநாதபுரம்), செல்வி பி. மதிவதனி (வட்டக்கச்சி), செல்வி எஸ். இராஜயோகம் (கிளிநொச்சி), செல்வி ஆர். இரஞ்சிதமலர் (கண்டாவளை), செல்வி கே. சாந்தினி, [வட்டக்கச்சி], செல்வி என். ஜெகதாம்பாள் [வட்டக்கச்சி], செல்வி எஸ். இரஞ்சிதவதனி [அக்கராயன் குளம்] செல்வி எஸ். புஷ்பரூபி [சிவநகர்], செல்விஏ. ஜமுனா (கணேசபுரம்), திரு. வி. கனகராஜா (இராமநாதபுரம்), திருமதி ஆர். பிரேமராணி (வட்டக்கச்சி), செல்வி என். தவராணி, (உருத்திரபுரம்), செல்வி பி. பராசக்தி(வட்டக்கச்சி)செல்விஎஸ். ஜெகதீஸ்வரி [மருதநகர்], செல்வி வி. பராசக்தி [இராமநாதபுரம்], செல்வி ஏ. இரதிவதனி (கணேசபுரம்), செல்வி எஸ். யோகம்மா [கண்டாவளை], செல்விகே. கஜலக்ஷ்மிஅம்மா (உருத்திரபுரம்),

### இந்துசமயம்

செல்வி ரீ. கமலநாயகி [இரத்தினபுரம்], திரு. ரீ. பொன்னம்பலம் (ஜெயந்திநகர்)

### இஸ்லாம்

செல்வி கே. றலீனா (கிளிநொச்சி], செல்விரீ. றைஸா [இராமநாதபுரம்], செல்வி எம். எம். நஸிக்கா [வட்டக்கச்சி]

### றோமன் கத்தோலிக்கம்

திரு. சி. மதுரநாயகம் [வட்டக்கச்சி], செல்வி எஸ். சி. அன்ரனற்றா (திருநகர்], செல்வி ஜெ. ஜெயந்தி [ஜெயந்திநகர்]

### கத்தோலிக்கம்

செல்வி எஸ். ஜெபஜோதி [கிளிநொச்சி), திரு. பி. தேவானந்தன் (திருநகர்], செல்வி எஸ். வி. செல்வராணி [தர்மபுரம்].

### சிங்களம்

செல்வி எம். சகுந்தலா [கிளிநொச்சி], செல்வி ஏ. ரீ. குலதேவி [கோணாவில்],

### தமிழ்:

செல்வி பி. யசோதா [இரணைமடு], செல்வி டபிள்யூ. ஜெயந்தினி[கணேசபுரம்]

### கணிதம்;

செல்வி ஜி. இராஜஸ்ரீ [வட்டக்கச்சி], செல்வி ஆர். கௌசல்யாதேவி [திருநகர்] செல்வி எஸ். உமாதேவி [திருவையாறு], செல்வி ஆர். தயாநிதி, [கனகபுரம்],

### விஞ்ஞானம்

திரு. ரீ. எஸ். நந்தகுமார் (கண்டாவளை), திரு. ரீ. துதிகாந்தன் (பரந்தன்), திரு. எஸ். கே. மகேந்திரன் முரசுமோட்டை), திரு. கே. விவேகானந்தன் (கண்டாவளை), செல்வி எஸ். நளாயினி (வட்டக்கச்சி), திருமதி ஜி. மங்களேஸ்வரி (உருத்திரபுரம்).

### ஆங்கிலம்:

செல்வி கே. கஜலக்ஷ்மி [உருத்திரபுரம்]. செல்வி ஏ. கமலாம்பிகை(திருநகர்), திரு. வி. எஸ். சோமசுந்தரம் (கண்டாவளை), திரு. எம். சிவதாஸன் (திருநகர்)

செல்விகே. ஐ. உதயகுமாரி (கண்டாவளை), திரு. பி. கணேசன் (அக்கராயன்குளம்) செல்வி எஸ். சுகர்ண சிறீபாரதி (கனகபுரம்), திரு. பி. ஜே. எம். சுரேந்திரன் (ஜெயந்திநகர்), செல்வி எஸ். சந்திரா (குமாரபுரம்), திரு. வி. தேவேஸ்வரன்(திருவையாறு)

### உடற்கல்வி:-

திரு. என். துவாரகநாதன் (உருத்திரபுரம்), திருமதி எல். இரதிதேவி(இராமநாதபுரம்), திரு. எஸ். பலநாதன் (வட்டக்கச்சி), திரு. எஸ். ரீ. கணேசலிங்கம் (உருத்திரபுரம்)

### சமூகக்கல்வி:-

செல்வி பி. பரமேஸ்வரி (திருநகர்), திரு. ஆர். கனகசபை (விசுவமடு), திரு. கே. காந்தவநேசன் (குமாரபுரம்),

### சித்திரம்:-

திரு. எஸ். படியலிங்கம் (பரந்தன்), செல்வி பீ. இரதிகுமாரி (கண்டாவளை), செவி எஸ். கமலராணி (கிளிநொச்சி), செல்வி ரீ. யூ. ஹேமமாலினி (திருநகர்), செல்வி எஸ். கேதீஸ்வரி (கிளிநொச்சி),

### சங்கீதம்:-

செல்வி கே. வாசுகி (உருத்திரபுரம்), செல்வி எஸ். சாந்குமாரி (இரத்தினபுரம்), செல்வி கே. சறோஜாதேவி,

### நடனம்:-

செல்வி வி. விஜயலக்ஷ்மி (திருநகர்), செல்வி ரீ. இளஞ்செல்வி (ஆனந்தபுரம்), செல்வி பி. தமிழ்மலர் (தர்மபுரம்), செல்வி எஸ். சிவஞானகுமாரி (கண்டாவளை), செல்வி ஏ. நீலவேணி (இரத்தினபுரம்) செல்வி எம். பவாஜினி (முரசுமோட்டை),

### வாழ்க்கைத்திறன்:-

செல்வி எஸ். சோதிமலர் (கண்டாவளை)

### விவசாயம்:-

திரு. எஸ். சிறீதரன் (வட்டக்கச்சி), திரு. ரீ. கருணாநிதி (ஜெயந்திநகர்).

### மனைப்பொருளியல்:-

செல்வி எஸ். யோகேஸ்வரி (அக்கராயன்குளம்), செல்வி எஸ். சசிகலா (பெரியபரந்தன்),

### வர்த்தகம்:-

செல்வி வி. ஜெயந்தினி (வட்டக்கச்சி), செல்வி ஜி. ஜெயவெந்தி (உருத்திரபுரம்)

## பூநகரி

### ஆரம்பகல்வி

பி. வசந்தா[பல்லவராயன் கட்டு] வி. விஜயா [ஞானிமடம்] எல். சரஸ்வதி[பரமங்கிரி] திரு. ஐ. கேசவன் (சிவபுரம்) ஆர். இந்திராதேவி (செட்டியாகுறிச்சி) திரு. எஸ். செல்வரட்ணம் (வேராவில்) பி. பாஹீரா (நாச்சிக்குடா) ஆர். தவமதர் (ஞானிமடம்) ஆர். எம். இஸ்மயில் (நாச்சிகுடா) என். நவீனமலர் (மட்டுவில் நாடு) பி. உமாகாந்தி (மட்டுவில் நாடு) எஸ். சுந்தராம்பாள் (நல்லூர்) திரு. கே. பி. விஜயநாதன் (நல்லூர்) திரு. எம். செல்வநாயகம் (கறுக்கை தீவு) எஸ். இஸ்மயில் (இரணைதீவு) வி. கிருஷ்ணகலா (தம்பிராய்) ஆர். கே. நிர்மலாதேவி (கரியாலை-நாகபடுவான்) என். கமலரஞ்சினி (தம்பிரான்) திரு. ஏ. அருமைநாயகம் (இரணைதீவு)

### முஸ்லீம் ஆரம்ப கல்வி:-

பி. பஹீமா (நாச்சிக்குடா)

### தமிழ்:-

கே. சரஸ்வதிப்பிள்ளை (மட்டுவில்நாடு)

### கணிதம்:-

ஏ. காஞ்சன ரூபி (மட்டுவில் நாடு)

### விஞ்ஞானம்:-

எஸ். மல்லிகாதேவி (மட்டுவில்நாடு)

### ஆங்கிலம்:-

ஏ. ருக்மணிதேவி [பல்லவாரயன்கட்டு] என். சிவமலர் [ஆலங்கேணி] பி. கிருஷ்னவேணி [ஆலங்கேணி]

### சமூகக்கல்வி:-

ஏ. மோகனேஸ்வரி (ஞானிமடம்) திரு. கே. புஸ்பராஜா (கறுக்காய் தீவு)

### கலை:-

பி. வர்ஹானா (நாச்சிக்குடா)

### சங்கீதம்:-

திரு. பி. சிதம்பரம் (நல்லூர்)

### நடனம்:-

கே. பிரேமலதா [கறுக்காய் தீவு] [இ-2-9]

## கலைஞருடனான

(3ம் பக்கத்தொடர்ச்சி) கடற்படையின் றோந்துபிரிவு வரும் என்று எதிர் பார்த்தோம். ஆனால் எவரும் எமது பயணத்தில் குறுக்கிடவில்லை.

ஈழத்தை சென்றடைந்ததும் விடுதலைப்புலிகள் என்னை அடர்ந்த காட்டுக்குள் அழைத்துச் சென்றனர். அங்கு விடுதலைப் புலிகள் தலைவர் திரு. பிரபாகரனைச் சந்தித்தேன். அவர் நலமுடன் இருக்கிறார்.

முற்றிலும் காடுகளால் சூழப்பட்ட பகுதியில் விடுதலைப் புலிகளின் போதிய பாதுகாப்போடு நன்றாக இருக்கிறார். அங்கு தொடர்ந்து விடுதலைப் புலிகள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

திரு. பிரபாகரன் என்னை காட்டுப் பகுதிக்குள் அழைத்துச் சென்று அனைத்து இடங்களையும் சுற்றிக் காண்பித்தார்.

விடுதலைப் புலிகள் வசிக்கும் காட்டின் முன் பகுதியிலேயே இந்தியப் படையை விடுதலைப் புலிகள் தடுத்து நிறுத்தி விட்டனர்.

பெப்ரவரி 18 ஆம் திகதி வரை திரு. பிரபாகரனுடன் தங்கியிருந்தேன்.

விடுதலைப் புலிகள் அமைப்பில் ஆயிரக்கணக்கானோர் இடம் பெற்றுள்ளனர். விடுதலைப் புலிகளுக்கு மாதம் ஒன்றேகால்கோடி ரூபா செலவாகிறது. இதைப் பொதுமக்களே மனமுவந்து அளித்து வருகிறார்கள்.

தமிழீழம் முழுவதும் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. விடுதலைப் புலிகள் நிர்வாகம் ஏற்பட்டதும் அமைதி நிலவுகிறது.

ஈழப்பகுதியில் சிங்களப் பொலீஸார் நுழைய வேண்டும் என்றால் விடுதலைப் புலிகளின் அனுமதி பெற்றுத்தான் நுழைகிறார்கள். 'பாயும் புலி பண்டார வன்னியன்' தொடர்கதையை விடுதலைப்புலிகள் நாடகமாக நடத்தி வருகிறார்கள்.

தமிழீழத்தில் மக்கள் பங்

## பேச்சுக்---

கேற்கும் சோஷலிச சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்பது தான் திரு. பிரபாகரனின் நோக்கம். அதை நிறைவேற்றுவதே அவருடைய லட்சியம் அதற்காக எந்தச் சவாலையும் சந்திக்க அவரும் விடுதலைப்புலிகளும் தயாராக இருக்கின்றனர்.

ஈழத்தில் இருந்து இந்திய அமைதிப்படை முழுவதும் வெளியேறிய பிறகு ஈழத் தமிழர்களை திரு. பிரபாகரன் சந்திப்பார்.

—இவ்வாறு திரு. ராமகிருஷ்ணன் சொன்னார். (உ-எ)

## மீன் இனங்கள் இறந்து மிதக்கின்றன

கொழும்பு, மார்ச் 15 மட்டக்களப்பில் ஒருவித நோய் காரணமாக மீன் இனங்கள் பெரும் அளவில் இறக்கின்றன.

உன்னிச்சை வாவி உட்பட பல வாவிகளிலும் மீன் இனங்கள் இறந்து மிதப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

மீன் உண்பதை நிறுத்தும்படி அப்பகுதிக்கான மீன்பிடித் திணைக்கள பொறுப்பதிகாரீ பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (இ)


## 2ஆம் வருட நினைவஞ்சலி



செல்லத்துரை - இரவிகரன்

[60 ஸ்ரீ 3712 உரிமையாளர்]

மண்ணில்: 09 - 08 - 1966

விண்ணில்: 06 - 04 - 1989

அன்பினால் எம்மை ஆட்கொண்டீர் நாம் உம் அன்பிற்கு அடி பணிந்தோம்! ஆண்டு இரண்டு சென்றாலும் உம் சொல்லை உம் செயலை நாம் மறவோம். இவரின் ஆன்ம சாந்திக்காக 15-3-1990 இல் இறைவனை வேண்டுகிறோம்.

பிரிவால் துயருறும்
தந்தை, தாய், சகோதர, சகோதரி
மருமகள், மருமகன்

அச்சுவேலி வடக்கு
அச்சுவேலி,

[2796]

உ

ஓம் ஸ்ரீ விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## திருமண அழைப்பிதழ்

மணமகன்: நவரட்ணராஜா
[காலஞ்சென்ற திரு. S. தம்பையா, திருமதி தம்பையா அவர்களின் புதல்வன்]

மணமகள்: கௌத்தமி
[திரு. அ. சாம்பசிவம் தம்பதிகளின் புதல்வி]

நாள்: 17-03-1990 சனிக்கிழமை
நேரம்: காலை 7 மணி முதல் காலை 9.30 மணிவரை
இடம்: தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயம்

இத்திருமண வைபவத்திற்கு தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து விருந்துபசாரத்திலும் பங்கு கொண்டு மணமக்களை ஆசிர்வதிக்குமாறு வேண்டுகிறோம். கொண்டாட்டம் மணமகள் இல்லத்தில் மூன்று நாட்கள் நடைபெறும்.

திருமதி ம. தம்பையா, பிள்ளைகள்,
172/80, திம்புள்ள வீதி,
வில்பிரட் நகரம்,
ஹட்டன்.

திரு. அப்பாத்துரை சாம்பசிவம்,
[K. K. S சீமெந்து ஆலை முன்னாள் ஊழியரும் Employees Council First President, முன்னாள் ஊழியர் சங்க செயலாளர்]
திருமதி சா. சாம்பசிவம்
[தாதியார் பயிற்சிப்பாடசாலை யாழ்ப்பாணம்]
பிள்ளைகள்.
22/2, பிறவுண்றோட்,
யாழ்ப்பாணம்.

[12045]

## முக்கிய அறிவித்தல்

O/L (March)
மாணவர்களுக்கான
இலவச பயிற்சிப் பரீட்சை

மேற்படி பரீட்சை இம் மாதம் 17, 18 [சனி, ஞாயிறு] பி.ப. 1.00மணிக்கு ஆரம்பமாகும்.

நேர அட்டவணை

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | கணிதம் | II | [17-03-1990] | பி.ப. 1.00—4.00 |
| | கணிதம் | I | [17-03-1990] | பி.ப. 4.00—5.00 |
| 2. | விஞ்ஞானம் | II | [18-03-1990] | பி.ப. 1.00—4.00 |
| | விஞ்ஞானம் | I | [18-03-1990] | பி. ப. 4.00—5 00 |

பரீட்சை மண்டபம்

★ சுட்டிலக்கம் 5000 தொடக்கம் 5350 வரை
Hall No I, II, III.
விக்னா டியூசன் சென்ரர்
52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

★ சுட்டிலக்கம் 5350 தொடக்கம் 5650
Hall No I, II, III, IV
புதிய உயர்கலைக் கல்லூரி
ஆரிய குளம் — யாழ்ப்பாணம்.

★ வெளிமாவட்டத்து பாடசாலைகளுக்கு வினாத்தாள்கள் யாவும் அனுப்பப்பட்டுள்ளன. எம்மிடம் பதிவு செய்த ஏனைய பாடசாலைகளும் நிறுவனங்களும் 16 - 03 - 1990 அன்று வினாத்தாள்களையும் விடைத்தாள்களையும் பெற்றுக் கொள்ளவும்.

முக்கிய குறிப்பு: பரீட்சைக்கான விடைத்தாள்கள் யாவும் இலவசமாக வழங்கப்படும். நிறுவனத்தால்வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரமும் உங்கள் அடையாள அட்டைகளையும் மற்றும் பரீட்சைக்குத் தேவையானவற்றையும் கொண்டு வரவும்.

விக்னா டியூசன் சென்ரர்
52, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.

FREE EXAM. UNIT

[சி-4015]

## கண்ணீர் அஞ்சலி



அமரர் திரு. வாமதேவா

தோற்றம்: 03 - 04 - 1921

மறைவு: 10 - 03 - 1990

பிள்ளையார் கோயிற் பெரும்பணிகள் செய்தவனே! வள்ளலே, வாமண்ணா! மறந்தனையோ எம்மையெல்லாம்! இந்து இளைஞர் இயக்கம் தொடக்கி வைத்த தந்தையே! ஊர் அயல் என்று ஓயாது உழைத்தவனே! சென்றுவா! ஐயா நீ செய்தவெதல்லாம் எண்ணி எண்ணி கண்ணீர்பெருக்கிக் கலங்கும் நிலைக்கு ஆளானோம்.

யாழ்ப்பாணம்.
(2795)

வைமன் இந்து இளைஞர் இயக்கம்.

Jaffna College
Institute of Technology
Vaddukoddai

NEW ADMISSION
ENGINEERING COURSE

The Full-time professional Engineering Course preparing students for E. C. E (London) Part I & II examinations has now been commenced.

Students of both six with minimum 3 passes in G. C. E (A/L) Maths can apply.

Lectures, Practicals are conducted by experienced & well qualified Engineers.

Library, Hostel & Sports facilities are available.

Only Few Vacancies
Call personally and apply.

Director


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தியகால சேவைக்கு உங்கள் அருகிலேயே
இருக்கும் அன்பன்
''நேசன்ஸ்''
★ பிரேதப் பெட்டிகள்
★ ஊர்வல வாகனம்
★ மலர் வளையங்கள்
★ எம்பாமிங்
★ நேசன்ஸ் ★
(வேம்படிச் சந்தி)
563, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

உதயன்
15 - 03 - 1990 வியாழக்கிழமை

NESON'S
FUNERAL UNDERTAKERS
FLORIST
CASKET EMBALMING
FUNERAL COACHES
No: 563, HOSPITAL ROAD,
VEMBADI JUNCTION JAFFNA.

# ஈழத் தமிழர் தொண்டைக்குள் தீர்வைத் திணிக்காது தி. மு. க.

## கருணாநிதி சொல்கிறார்

சென்னை, மார்ச் 15

ஈழத் தமிழர் பிரச்சினை தொடர்பாக, தி. மு. க. ஒரு போதும் எந்தத் தீர்வையும் அவர்கள் தொண்டைக்குள் திணிக்கமாட்டாது.

இவ்வாறு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி தெரிவித்தார்.

ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கம் தனிநாடு பிரகடனம் செய்தது சம்பந்தமாகக் கேட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

இலங்கைத் தமிழர் தங்கள் உரிமைகளுக்காகப் போராடி வருகிறார்கள். தங்கள் பிரச்சினைக்கு எதனைத் தீர்வாக இலங்கைத் தமிழர் கருதுகின்றனரோ அது விஷயத்தில் தலையிடுவதில்லை என்பதே தி. மு. கவின் நிலைப்பாடு ஆகும்.

இலங்கைத் தமிழரின் தொண்டைக்குள் எந்தத் தீர்வையும் தி. மு. க. திணிக்காது.

தி. மு. கவின் பொதுச் சபைக் கூட்டங்களிலும் செய்தியாளர்கள் மாநாடுகளிலும் தி.மு.க, தனது இந்த நிலைப்பாட்டை வலியுறுத்தி வந்திருக்கிறது.

நாம் இந்த நிலைப்பாட்டில் உறுதியாகவே உள்ளோம் — என்றார்.

ஒரிஸ்ஸாவில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை தமிழ்நாட்டுக்கு மாற்றம் செய்ய அனுமதிக்கப்படுமா? என்ற கேள்விக்குப் பதிலளிக்கையில் அவர் பின்வருமாறு கூறினார்:-

''ஈ.பி.ஆர். எல் எவ். என்றாலும் சரி விடுதலைப் புலிகள் என்றாலும் சரி தமிழ் நாட்டில் மீண்டும் முகாம்கள் அமைக்க அனுமதிக்கமாட்டோம்'' —என்றார். (அ-எ)

## காஷ்மீர் சிங்கத்தின் வீடு தீக்கிரை!

ஸ்ரீநகர், மார்ச் 15

காஷ்மீர் சிங்கம் என்றழைக்கப்பட்டவரான மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஷேக் அப்துல்லாவின் வீடு ஸ்ரீநகரில் தீக்கிரையாக்கப்பட்டது.

தனிநாடு கோரும் காஷ்மீர் தீவிரவாதிகள் இச்செயலைப் புரிந்ததாகக் கூறப்பட்டது.

ஷேக் அப்துல்லாவின் மகன்தான் டாக்டர் பரூக் அப்துல்லா. இவர் அண்மைக் காலம்வரை காஷ்மீர் முதலமைச்சராகப் பதவி வகித்தார். (ஓ-எ)

## ஆஸ்பத்திரி வீதி வங்கியில் நிவாரணக் கொடுப்பனவு

யாழ்ப்பாணம், மார்ச் 15

சாவகச்சேரி இலங்கை வங்கிக்கிளையில் பணக் கொடுப்பனவு நடைபெறாததால் அப்பகுதிக்கான மீளக் குடியமர்தல் நிவாரணம் எதிர்வரும் 17ஆம், 18ஆம் திகதிகளில் (சனி, ஞாயிறு தினங்களில்) யாழ். ஆஸ்பத்திரி வங்கிக்கிளையில் வழங்கப்பட இருக்கின்றது.

17ஆம் திகதி நாவற்குழி கிராமசேவையாளர் பிரிவைச் சேர்ந்த 416 குடும்பங்களுக்கும், கைதடி தெற்கைச் சேர்ந்த 447 குடும்பங்களுக்கும், மறவன்புலோ பிரிவைச் சேர்ந்த 175 குடும்பங்களுக்கும் நிவாரணப்பணம் வழங்கப்படும்.

18ஆம் திகதி கைதடி மேற்கைச்சேர்ந்த 441 குடும்பங்களுக்கும், கைதடி நுணாவில் பகுதிகளைச் சேர்ந்த 594 குடும்பங்களுக்கும் நிவாரணம் வழங்கப்படும். (ஓ-3)

## பருத்தித்துறை வங்கியிலும்

பருத்தித்துறை, மார்ச். 15

இலங்கை வங்கி பருத்தித்துறைக் கிளையில் எதிர்வரும் சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் மீளக்குடியமர்தல் நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

முதற்கட்ட கொடுப்பனவை முன்னர் எடுக்கத் தவறியோருக்கு இம்முறை ரூபா 2ஆயிரம் வழங்கப்பட இருக்கிறது.

சனிக்கிழமை வல்வெட்டித்துறை வடக்கைச் சேர்ந்த ஆயிரத்தெட்டு [1008] குடும்பங்களுக்கு கொடுப்பனவு வழங்கப்படும். மேலும் அன்று இப்பகுதியைச் சேர்ந்த 10 குடும்பங்களுக்கு ரூபா 2 ஆயிரம் வழங்கப்பட இருக்கிறது.

ஞாயிற்றுக்கிழமை புலோலி கிழக்கு கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த 972 குடும்பங்களுக்கு இரண்டாம் கட்ட நிவாரணம் வழங்கப்படும்.

அன்று அதே பகுதியைச் சேர்ந்த 5 குடும்பங்களுக்குமுழு நிவாரணமாக ரூபா 2ஆயிரம் ரூபா கிடைக்க இருக்கிறது.

இக் கொடுப்பனவுகளைப் பெறவுள்ளவர்கள் அறிமுக அட்டை, அடையாள அட்டை குடும்ப அட்டை முதலியவற்றுடன் 12.00 மணிக்கு முன்னதாக வங்கிக்குச் சமூகமளித்து தமது ஆவணங்களை உரிய நேரத்தில் நிரப்பிக் கொடுத்து உதவுமாறு முகாமையாளர் திரு. எஸ். மகாலிங்கம் கேட்டுள்ளார். [ஓ-118]

## பஸ் சேவை நிறுத்தம்?

யாழ்ப்பாணம், மார்ச் 15

ரயில் சேவைகள் ஆரம்பமானதை அடுத்து வடபிராந்திய போக்குவரத்து சபையினால் நடத்தப்பட்டு வந்த கொழும்புக்கான பஸ் சேவைகள் படிப்படியாக நிறுத்தப்பட்டு வருகின்றன.

நேற்று முதல் கோண்டாவில் சாலை இரவு பஸ் சேவையை நிறுத்திவிட்டது.

தற்போது காரைநகர் சாலை மட்டுமே காலை வேளையில் கொழும்புக்கான தனது சேவையை நடத்தி வருகின்றது. இதுவும் ஒரு சில தினங்களில் நிறுத்தப்படலாம் எனச் சொல்லப்படுகிறது. (ஓ-9)

## ஆவரங்காலில் அடைமழை

ஆவரங்கால், மார்ச் 15

ஆவரங்கால் பகுதியில் நேற்று மாலை பலத்த மழை பெய்தது.

குடாநாட்டின் ஏனைய பகுதிகளில் சுடும் வெயிலாக இருந்த போதிலும் ஆவங்காலில் சுமார் 45 நிமிட நேரம் அடைமழை பெய்தது. (ச)

### திருமலையில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளனர்.

தற்போது சீனக்குடாவில் உள்ள கிளப்பன்பேர்க் தளத்தில் நிலை கொண்டுள்ள இந்திய அமைதிகாக்கும் படையினர் எதிர்வரும் 24ஆம் திகதி அங்கிருந்து முற்றாக வெளியேறுவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (இ)

### முல்லைத்தீவில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்வரும் 19 ஆம் திகதி நியமனக் கடிதங்கள் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-92-21)

## ஜீ. சீ. ஈ. உயர் பரீட்சை
## நகருக்கு வெளியேயுள்ள பாடசாலைகளின் முடிவுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 15

ஜீ. சீ. ஈ. உயர்தரப் பரீட்சையில் நகருக்கு வெளியேயுள்ள பாடசாலைகள் பெற்ற சிறந்த பெறுபேறுகள் சில நேற்று உதயனுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. அவை வருமாறு:-

வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி: 2 ஏ, 2 பி — 2 பேர், 2 ஏ, பி, ஸி — ஒருவர்.

நாவற்குழி மகாவித்தியாலயம்: ஏ 2 பி, எஸ் —ஒருவர், பி, ஸி. 2 எஸ் — ஒருவர்.

கைதடி முத்துக்குமாரசுவாமி ம. வி: பி, 2 ஸி, எஸ் — ஒருவர், 3 ஸி, எஸ் — ஒருவர்.

மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம. வி: ஏ, 2பி, ஸி — ஒருவர், 2 பி, 2 ஸி — ஒருவர். (ஓ-ச)

## 435 கிராமசேவையாளர்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

- நிரப்பப்படவில்லை, ஈச்சமோட்டை (ஜே. 66) - என். சுந்தரலிங்கம், திருநகர் (ஜே. 67) - நிரப்பப்படவில்லை.

ரெக்கிளமேசன் கிழக்கு (ஜே. 68) – எம். கருணைநாதன், ரெக்கிளமேசன் மேற்கு (ஜே. 69) – நிரப்பப்படவில்லை.

குருநகர் கிழக்கு (ஜே 70)- நிரப்பப்படவில்லை, குருநகர் மேற்கு (ஜே.71) – ஆர். அன்ரனி, சின்னக்கடை (ஜே. 72)- பி. தர்மபாலன், யாழ். நகர மேற்கு (ஜே.73) - எம். ஐயாத்துரை, யாழ். நகர கிழக்கு (ஜே 74) – திருமதி எம். மகேஸ்வரன்.

சுண்டுக்குளி தெற்கு (ஜே. 75) – பி. சொக்கலிங்கம், சுண்டுக்குளி வடக்கு (ஜே.76) – ஏ. அலக்ஸ், மருதடி (ஜே. 77) – கே. தில்லைநாதன்.

அத்தியடி (ஜே. 78) – என். ரவிந்திரதாஸ், சிறாம்பியடி (ஜே. 79) – கே. நித்தியானந்தன், பெரியகடை (ஜே.80)- கே. சிவராஜ், கோட்டை (ஜே. 81) – வி. தில்லைநடராஜ்.

வண்ணார்பண்ணை (ஜே. 82) – பி. செந்தூரன், கொட்டடி (ஜே.83) – எம். ஆரோக்கியநாதன், நாவாந்துறை தெற்கு (ஜே. 84) – வெற்றிடம், நாவாந்துறை வடக்கு (ஜே. 85) – எஸ். பி. இம்மானுவேல், மூர் வீதி தெற்கு (ஜே. 86) – வெற்றிடம், மூர் வீதி வடக்கு (ஜே. 87) – எம். எஸ். ஐநூஸ், புதிய மூர் வீதி (ஜே. 88) – வெற்றிடம்.

(மிகுதி நாளைய உதயனில்) (ஓ-3)

### யாழ் அரச...

( 1 ஆம் பக்க தொடர்ச்சி)

டைந்து புனரமைக்கப்படும். வீடுகளையும் இவர் பார்வையிட்டார்.

உடுவில் பூரணி மகளிர் இல்லத்துக்கும் இவர் விஜயம் செய்தார்.

வலது குறைந்தோர் நிவாரணத் திட்ட சங்கத்தினரையும், கோழிப்பண்ணையாளர் சங்கத்தினரையும் இவர் சந்தித்து பிரச்சினைகளைக் கேட்டறிந்தார்.

இவருடன் வந்த அமைப்பின் அதிகாரி ஜனாப் ஜபார் தற்சமயம் இங்கு தங்கிமேலும் நிவாரணம் தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறார். (அ-2)

## கூட்டம் நடத்துவதற்கு எதிரணிக்கு விரைவில் அனுமதி

கொழும்பு, மார்ச் 15

பொதுக் கூட்டங்களை நடத்த எதிர்க்கட்சிகளுக்கு விரைவில் சந்தர்ப்பம் அளிக்கப்படும் என்று அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

பொதுக்கூட்டம் நடத்த ஐந்து எதிர்க்கட்சிகளுக்கு அரசு அனுமதி மறுத்த விஷயத்தை எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோபண்டாரநாயக்கா நேற்று நாடாளுமன்றத்தில் பிரஸ்தாபித்தார். அப்போதுதான் அமைச்சர் முன்கண்டவாறு தெரிவித்தார்.

மனித உரிமை மீறல், வாழ்க்கைச் செலவு உயர்வு, ஜனநாயக உரிமைகள் அழிக்கப்படுவது ஆகியவற்றை எதிர்த்து பொதுக்கூட்டம் நடத்த அரசாங்கம் எதிர்க்கட்சிகளுக்கு அனுமதி மறுத்திருந்தது குறிப்பிடத்தக்கது. (ஓ-எ)

## அனைத்துக்கட்சி மாநாடு மீண்டும் ஏப்ரல் 3 இல்

கொழும்பு மார்ச் 15

அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பது, நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் வாழும் சகல மக்களுக்கும் பாதுகாப்பு அளிப்பது, பொது ஜன தொடர்பு சாதனங்களின் சுதந்திரச்செயற்பாடு ஆகிய மூன்று விடயங்கள் குறித்தும் ஆராய்வதற்காக அனைத்துக் கட்சி மாநாட்டின் பிரதிநிதித்துவக் குழு ஏப்ரல் மூன்றாம் திகதி கூட இருக்கிறது.

நேற்று ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற அனைத்துக்கட்சி மாநாட்டில் இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டது. நேற்றைய மாநாட்டில் 18 அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டானர்.

அனைத்துக்கட்சி மாநாட்டில் ஆராயப்பட இருக்கும் அடிப்படை விடயங்கள் குறித்து மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

## சிங்களத் தேர்ச்சி பரீட்சை

யாழ்ப்பாணம், மார்ச் 15

அரசாங்க சேவை தமிழ் உத்தியோகத்தர்களுக்கான சிங்களத் தேர்ச்சி வாய்மூலப் பரீட்சைகள் இம்மாதம் 24, 25, 26ஆம் திகதிகளில் நடைபெற இருக்கின்றன. (ஓ-3)

## 50 பேர் விடுவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 15

தமிழீழ விடுதலைப் புலிகளினால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளவரில் 50 பேர் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

நேற்று அச்சுவேலியில் உள்ள புலிகளின் பிரதேசக் காரியாலயத்தில் வைத்தே இவர்கள் விடுவிக்கப்பட்டனர். [அ-9]

### ஆறாவது..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினர்களும் அரசுக்கு ஆதரவு அளிக்க இருக்கின்றனர்.

அதன் பின்னரும் மூன்று எம். பிக்களின் அரசுக்குத் தேவைப்படுகிறது. ஐக்கிய சோஷலிச முன்னணியின் இரண்டு எம்.பி.களின் ஆதரவைப் பெற முடியும் என அரச வட்டாரங்கள் நம்புகின்றனவாம்,

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை பிரஸ்தாப கட்சி ஆதரிப்பதால் அதன் உதவியை நாடலாம் என்று ஆலோசனை கூறப்பட்டிருப்பதாகவும் அறியவருகிறது.

மிகவும் அந்தரங்க மட்டத்தில் அதற்கான முயற்சிகள் நடப்பதாகவும் அரசியல் அவதானிகள் பேசிக் கொள்கிறார்கள். (அ)

### இலங்கைக்கும்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

செய்துகொள்வதற்கான ஆரம்பப் பேச்சுவார்த்தைகள் விரைவில் நடைபெறவுள்ளன.

இன்னும் சில நாட்களில் இலங்கைக்கு வரவிருக்கும் இந்தியப் பொருளாதாரக் குழு புதிய ஒப்பந்தம் சம்பந்தமான ஆரம்பப் பேச்சுக்களை நடத்த உள்ளது — இவ்வாறு திரு. தொண்டமான் கூறினார். (அ-2)

## மட்டக்களப்பு அரச அதிபராக யோகநாதன்

கொழும்பு. மார்ச் 15

மட்டக்களப்பு அரச அதிபராக திரு. ஆர். யோகநாதன் நியமனம் பெறவுள்ளார் என அறிய வருகிறது.

திரு. யோகநாதன் புனர் வாழ்வுத்துறை துணைஅமைச்சின்சிரேஷ்டஉதவிச்செயலாளராக தற்பொழுது கடமையாற்றி வருகிறார்.

புதிய பதவியை இம்மாத இறுதியில் இவர் ஏற்றுக் கொள்வார் எனத் தெரிவிக்கப்பட்டது.

தற்போதைய அரச அதிபர் திரு. கே. செல்வரத்தினம் சேவையிலிருந்து ஓய்வு பெறுகிறார். (ஓ-2)



## மாணிப்பாய் மருதடி விநாயகர் அடியார்களின் கவனத்துக்கு

மேற்படி ஆலயம் 1982ம் ஆண்டு யூலை மாதம் 15ம் திகதி யாழ் மாவட்ட நீதிமன்றத்தினால் பொது நம்பிக்கைச் சொத்தாகப் பிரகடனப்படுத்தப் பட்டது யாவரும் அறிந்ததே. நீதிமன்றத் தீர்ப்பின் படி அன்று தொட்டு இவ்வாலயம் நீதிமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வழிபடுவோர் சங்கத்தினால் 5 வருடத்துக்கு ஒரு முறை தேர்ந்தெடுக்கப்படும் 7 தர்மகர்த்தாக்கள் அடங்கிய சபையினால் நிர்வகிக்கப் பட்டு வருகின்றன.

இது இவ்விதம் இருக்க சில விஷமிகள் இவ்வாலயத்தின் பெயரைக் கூறி பொதுமக்களிடம் பணம் சேகரித்து வருவதாக தகவல்கள் கிடைத்து இருக்கின்றன. இக் கும்பல் சில காலத்துக்கு முன்பு சங்கம் ஒன்று அமைத்து தான் தோன்றித்தனமாக செயற்பட்டு அடியார்களின் கண்ணில் மண்ணைத் தூவி பணமோசடி செய்துள்ளது. அக்கும்பல் தற்சமயம் வேறு ஒரு பெயரைச் சூடி அடியார்களிடம் பணம் சேகரிக்கஎத்தனிக்கின்றது. எனவே இப்படியான போலிச் சங்கங்களை நடாத்துவதாகக் கூறி பணம் சேர்க்கும் பேர்வழிகள் பற்றி ஜாக்கிரதையாக இருக்கும்படி விநாயகர் அடியார்களைக் கேட்டுக் கொள்கின்றோம். இவ்வாலயத்தின் பெயரைக்கூறி சங்கம் ஸ்தாபிப்பதோ பணம்சேர்ப்பதோ சட்ட விரோதமானது என்பதை அடியார்கள் அக்கும்பலுக்குத் தெரியப்படுத்துவதுடன் ஆலயம் சம்பந்தமாக அடியவர்கள் ஏது செய்யினும் ஆலய தர்மகர்த்தா சபையுடன் நேரடித்தொடர்பு கொண்டு செயல்படும் படி கேட்டுக்கொள்கின்றோம்.

மானிப்பாய் மருதடி
விநாயகர் ஆலய தர்மகர்த்தா சபை

[12051]



## மரண அறிவித்தல்கள்

### திருமதி சிவபாக்கியம் செல்லத்துரை

காலஞ்சென்ற வைத்தியர் செல்லத்துரையின் அன்பு மனைவியும். முருகவேள் (நல்லூர் பிரதேச சபை), சோமாஸ்கந்தவேள் (ஸ்ரீ சிவகுருநாத குருபீட அதிபதி), குமரவேள் (ஜேர்மனி), பரமானந்தவல்லி, கருணகலாவல்லி ஆகியோரின் அன்புத் தாயாரும், குணநாயகி, தியாகேஸ்வரி, ஸ்ரீஸ்கந்தராசா, சோமநாதன் ஆகியோரின் அன்பு மாமியாரும், சிவசுப்பிரமணியம் (மலேசியா), காலஞ்சென்ற முத்துக்குமாரு ஆகியோரின் அன்புச் சகோதரியும், அருணி, சுமன், ஜெயந்தினி, தனுஷன் ஆகியோரின் அன்புப்பேத்தியுமாகிய தலையாளியைச் சேர்ந்த திருமதி சிவபாக்கியம் காலமாகிவிட்டார். அன்னாரது ஈமக்கிரிகைகள் 15- 3- 90 வியாழக்கிழமை பிற்பகல் 2. 00 மணிக்கு கொக்குவில் சம்பியன் ஒழுங்கை இல்லத்தில் நடைபெற்று கொக்குவில் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:
சோமாஸ்கந்தவேள்.

(11998)

### கனகசபை வாமதேவா

கனகசபை வாமதேவா காலமாகிவிட்டார் இவர் சொர்ணாம்பிகையின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கனகசபையின் மகனும், காலஞ்சென்ற C.T நவரட்ணத்தின் மருமகனும், காலஞ்சென்ற தருமபுத்திரன், பரமேந்திரன், தியாகேந்திரன், சந்திரவதனி, மதிவதனி, குமரேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், நவரத்தினராஜா (கண்ணன்), சௌந்தரராஜன், நீலா, நந்தினி ஆகியோரின் மாமனாரும், சதர்சனா, சஞ்சீவ், தாட்சாயினி, நிலாந்தினி, அர்ச்சுனா, ராஜ், அருண், மதுசூதனன் ஆகியோரின் அன்புப்பாட்டனாரும், இரத்தினசபாபதி (இரத்தினம்), காலஞ்சென்ற நடராஜா, நாகேந்திரா [ராசு] ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற ஸ்ரீ பத்மநாதன். என். சம்பந்தன், திருமதி வெற்றிவேலு, திருமதி பரமேஸ்வரன், திருமதி வன்னியசிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரிகைகள் இன்று 15- 3- 90 வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று காலை 10 மணிக்கு பூதவுடல் செம்மணி மயானத்திற்கு தகனத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் வேண்டுகின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

327, நாவலர் வீதி,
நல்லூர்.

(11999)

### திரு. K. R. சுப்பிரமணியம்

(ஓய்வு பெற்ற அதிபர், அமெரிக்கன் மிஷன் பாடசாலை, காங்கேசன்துறை)

கீச்சியன்காடு வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. K. R. சுப்பிரமணியம் காலமானார். இவர் பகவதிப்பிள்ளை (ஓய்வுபெற்ற ஆசிரியர் சிவகுரு வித்தியாசாலை, வல்வெட்டித்துறை) யின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கார்த்திகேசு பொன்னு அவர்களின் இளைய மகனும், ஓய்வு பெற்ற கணக்காளர் சங்கரப்பிள்ளை அவர்களின் சகோதரரும், சுகிர்தரத்தினம், S. S. சாந்தகுரு (பொறியியலாளர்- லண்டன்), மகேந்திரராணி, S. A. பேரின்பநாயகம் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஆசீர்வாதம் (தபாலதிபர், யாழ். தபாலகம்), சிவபாக்கியம் (லண்டன்), காலஞ்சென்ற R. J. S. இராஜரட்ணம் (முன்னைநாள் பொறியியலாளர், காங்கேசன்துறை), ரேவதி (லண்டன்) ஆகியோரின் மாமனாரும், அரவிந்தன், நரேந்திரன், அகிலா, சுதாகரன், தயாகரன், தியாகன், காயத்திரி, கீதன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

நல்லடக்கம் பற்றிய விபரம் பின்பு அறிவிக்கப்படும்.

61, பாரதி வீதி, யாழ்ப்பாணம்.
தகவல்: திருமதி K.R. சுப்பிரமணியம்

(12101)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 15- 03 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org